Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

CC.No. 34 /2023

**2024-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20-ம் தேதி செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 6 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 6 | தொழில் | - | கூலிவேலை |
| பெயர் | - | முருகன் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | செல்வராஜ் | சமயம் | - | |
| கிராமம் | - | சங்கிலிரோடு | வயது | - | 47 |
| சாதி | - | | | | |

**20.02.2024**

**(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 -ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை:**

1. நான் சங்கிலிரோட்டில் வசித்து கூலிவேலை செய்து வருகிறேன். கடந்த 25.05.2023 அன்று மதியம் 03.00 மணியளவில் சங்கிலிரோட்டில் உள்ள ராஜாராம் வீட்டிற்கு முன்னால் தர்மலிங்கமும், ராஜாராம், சுப்பிரமணியும் சண்டைப் போட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் மூவரையும் விலக்கிவிட்டு வேலைக்கு போகவேண்டியிருந்ததால் பேக்ட்ரி வேலைக்கு போய்விட்டேன்.

2. வேலைக்கு போகலாம் என்று இருந்தபோது சுப்பிரமணியின் வலது கையில் கத்தியால் தர்மலிங்கம் குத்திவிட்டார். சுப்பிரமணிக்கு முதலுதவி செய்துவிட்டு நான் வேலைக்கு போய்விட்டேன். மறுநாள் டேமிலிருந்து SI வந்து படம் வரைந்து செல்லில் போட்டோ எடுத்தார். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 2-வது கையெழுத்து என்னுடையதுதான். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ. 2 ஆகும்.**

3. 25.05.2023- ம் தேதி மதியம் 03.00 மணியளவில் ராஜாராம் வீட்டிற்கு பக்கத்தில் போலீசார் கத்தி எடுத்தார்கள். அதற்கு சாட்சியாக நானும், சுதர்ஷனும் கையொப்பம் போட்டோம். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 2-வது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ. 3 ஆகும்.** போலீசார் கைப்பற்றிய கத்தியை என்னால் அடையாளம் காட்ட முடியும். தற்போது நீதிமன்றத்தில் என்னால் அடையாளம் காட்டப்படும்

கத்திதான் அது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை:**

எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் போதுமான வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திரு. ரெ. செந்தில்குமார்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.